*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*26 06 2026 FRIDAY 7 15 AM*
*ஆகாஷ்வாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. பொருளாதார ஸ்திரத்தன்மையை பராமரிக்க, சுயசார்பு நிலை எட்டப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. இந்தியா - பிரிட்டன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் புதிய வாய்ப்புகளுக்கு வழிவகுக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

3. வர்த்தக ரீதியிலான எரிவாயு சிலிண்டருக்கு விதிக்கப்பட்டுள்ள அனைத்து கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

5. இந்தியா - அயர்லாந்து அணிகளுக்கிடையேயான முதலாவது டிவென்ட்டி- டிவென்ட்டி கிரிக்கெட் போட்டி, Belfast-ல் இன்று நடைபெறுகிறது.

>>>>>><<<<<<

பொருளாதார ஸ்திரத்தன்மையை பராமரிக்க, சுயசார்பு நிலை எட்டப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பயிற்சி முடித்த ராணுவ பொறியியல் சேவை அதிகாரிகளிடையே அவர் உரையாற்றினார்.

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது உள்நாட்டு பாதுகாப்பு திறன் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பம் இதனை எடுத்துக்காட்டும் வகையில் உள்ளதாக குறிப்பிட்டார்.

நாட்டின் பாதுகாப்பு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் ராணுவ பொறியியல் சேவை அதிகாரிகள் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அவர் கூறினார்.

திட்டங்களை செயல்படுத்தும் போது, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், புதுமை கண்டுபிடிப்புகள் ஆகியவற்றுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த உயர்நிலை ஆய்வுக் கூட்டம் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் புதுதில்லியில் நடைபெறுகிறது.

போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியம் ஏற்பாடு செய்துள்ள இந்த ஆய்வுக் கூட்டத்தில் மத்திய அமைச்சகங்கள், மாநில அரசுகளின் பிரதிநிதிகள் போதைப்பொருள் தடுப்புச் சட்ட அமலாக்க முகமைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் போதைப்பொருள் தடுப்பு குறித்த செயல்திட்ட கையேட்டையும் அவர் வெளியிடுகிறார்.

இதனையடுத்து ஜம்மு மற்றும் குவஹாத்தியில், போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியத்திற்காக புதிதாக கட்டப்பட்டுள்ள மண்டல அலுவலக கட்டிடங்களையும் திரு. அமித் ஷா திறந்து வைக்கிறார்.

மேலும், போதைப்பொருள் பயன்பாடு இல்லாத இந்தியாவை உருவாக்குவதற்கான அரசின் முன்முயற்சிகள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர்.

>>>>>><<<<<

பொருளாதார நன்மைகளை கருத்தில் கொண்டு, இந்தியா - பிரிட்டன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

லண்டனில் நடைபெற்ற இந்திய சர்வதேச மன்றத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், இவ்விரு நாடுகளுக்கு இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், ஜூலை 15ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளதாக தெரிவித்தார்.

இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகம் அதிகரிப்பதற்கு இது உதவிடும் என்று அவர் கூறினார்.

சர்வதேச வர்த்தக நடைமுறைகள், பொருளாதார வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளுக்கு இந்த ஒப்பந்தம் உதவிடும் என்று திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

>>>>>><<<<<

சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும், சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலை தடுத்து நிறுத்துவதற்கும் ஆண்டுதோறும் ஜூன் 26-ம் தேதி இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இதனையொட்டி, நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த தினத்தை ஒட்டி, தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வினாடி வினா போட்டியை மத்திய விளையாட்டு அமைச்சகம் நடத்துகிறது.

மைபாரத் செயலி மூலம் நடத்தப்படும் இப்போட்டி, அடுத்த மாதம் 15ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இந்த போட்டியில் பங்கேற்க விரும்பும் இளைஞர்கள், mybharat இணையதளம் வாயிலாக பதிவு செய்துகொள்ளலாம் என்று அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனையொட்டி, தமிழகத்தின் சென்னையில் காமராஜர் சாலையில் நடைபெற்ற மாரத்தான் ஓட்டத்தை முதலமைச்சர் திரு. விஜய் இன்று காலை தொடங்கி வைத்தார்.

முன்னதாக, போதைப்பொருள் ஒழிப்பு குறித்த உறுதிமொழியையும் முதலமைச்சர் செய்து வைத்தார்.

>>>>>><<<<<<

நெதர்லாந்து நாட்டின் அரசியும், நிதிசார் நடவடிக்கைகளுக்கான ஐ.நா பொதுச்செயலாளரின் சிறப்பு பிரதிநிதியுமான திருமதி. Maxima-வுடனான சந்திப்பு ஆக்கபூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த சந்திப்பின் போது இந்தியாவின் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு சார்ந்த நிதி சேவைகள் குறித்து விவாதித்ததாக தெரிவித்துள்ளார்.

டிஜிட்டல் அடிப்படையிலான நிதிசார் நடவடிக்கைகளின் அனுபவங்களை உலக நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதற்கு இந்தியா தயாராக உள்ளது என்றும் பிரதமர அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

தொழில் மற்றும் வர்த்தக ரீதியிலான எரிவாயு சிலிண்டருக்கு விதிக்கப்பட்டுள்ள அனைத்து கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய பெட்ரோலிய அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நுகர்வொருக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, உள்நாட்டு எரிவாயு உற்பத்தி அதிகரித்துள்ளதுடன், இறக்குமதியும் சீரடைந்துள்ளதாக அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

உள்நாட்டில் எரிவாயு விநியோகம் பாதிக்கப்படாமல் இருப்பதை எண்ணெய் நிறுவனங்கள் உறுதி செய்யும் வகையில் திருத்தியமைக்கப்பட்ட விநியோக நடைமுறைகளை முறையாக செயல்படுத்த வேண்டும் என்று மத்திய பெட்ரோலிய அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

நாட்டின் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்யவும், தூய்மையான எரிபொருள் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலும் மத்திய அரசு

பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

>>>>>><<<<<<

பருவநிலை மாற்றத்தை கருத்தில் கொண்டு, குறுகிய கால பயிர்களை சாகுபடி செய்வதற்கான நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில், அவசரகால திட்டங்களை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர், மாநிங்களின் புவியியல் தன்மைகளை கருத்தில்கொண்டு, அதிக மகசூல் தரும் பயிர் உற்பத்திக்கான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கோதுமை, கொண்டைக்கடலை மற்றும் பருப்பு வகைகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு நிவாரண வழங்கும் வகையில், ரபி பருவ பயிர்களுக்கான, குறைந்தபட்ச ஆதரவு விலையிலான கொள்முதல் காலம் ஜூலை 8ஆம் தேதிவரை நீட்டிக்கப்படுவதாக
திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

நாட்டின் கச்சா எஃகு உற்பத்தி கணிசமான அளவு அதிகரித்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக மத்திய எஃகு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த மே மாதத்தில் 14 புள்ளி ஒரு மில்லியன் டன்னாக

பதிவாகியுள்ளதாகவும், இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒன்று புள்ளி ஒன்பது சதவீதம் கூடுதலாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு எமிரகம், வியட்நாம், பெல்ஜியம், நேபாளம் மற்றும் இத்தாலி நாடுகளுக்கு எஃகு ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

*Hormuz* நீரிணைப் பகுதியில் ஈரான் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள வழித்தடத்தில் மட்டுமே கப்பல் போக்குவரத்து நடைபெற வேண்டும் அந்நாட்டு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதுதொடர்பாக அந்நாட்டு ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதர வழிகளில் கப்பல் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கடல்சார் அமைப்புடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், *Hormuz* நீரிணை வழியாக வர்த்தக கப்பல்கள் செல்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை ஓமன் நாட்டு கடல்சார் பாதுகாப்பு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பை அடுத்து, ஈரான் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

>>>>>><<<<<<

இந்தியா - அயர்லாந்து அணிகளுக்கிடையேயான முதலாவது டிவென்ட்டி- டிவென்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

*Belfast*-ல் இப்போட்டி இந்திய நேரப்படி மாலை 6 மணிக்குத் தொடங்குகிறது.

>>>>>><<<<<<

உலகக்கோப்பை மகளிர் டிவென்ட்டி டிவென்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 5 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷை வென்றது.

மான்செஸ்டரில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த பங்களாதேஷ் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 136 ரன் எடுத்தது.

இதனையடுத்து 137 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய இந்தியா 16 புள்ளி ஐந்து ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 139 ரன் எடுத்தது.

>>>>>><<<<<<

உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில், இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

ஜெர்மனியில் நடைபெற்ற இப்போட்டியின், மகளிர் 50 மீட்டர் பிஸ்டல் பிரிவில், இந்தியாவின் ஐஸ்வர்யா ரவிச்சந்திரா Balehosur வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஆடவர் 50 மீட்டர் பிஸ்டல் பிரிவில், இந்தியாவின் ராஜ் சந்திரா வெண்கலப் பதக்கம் வென்றார்.

இப்போட்டியின் இந்தியா 7 தங்கம், 8 வெள்ளி, 10 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் முதலிடம் பெற்றது.

>>>>>><<<<<<

ஆசியக்கோப்பை Bridge சாம்பியன் போட்டியில், இந்தியா-ஏ அணி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கோவாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் லீக் சுற்றில் மூன்றாவது இடத்தைப் பிடித்ததன் மூலம், இந்தியா-ஏ ஆடவர் அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

*>>>>>>END<<<<<<*